**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.246/2017**

**Deposition of P.W.** 4

Name : நாகேந்திரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: **12.02.2025**

A1, A3, to A6 Present. A2, A7 absent Petition filed and allowed.

முதல் விசாரணை–

நான் மாறாங்கோணத்தில் வசித்து வருகிறேன். நான் ஹோட்டலில் டீ மாஸ்டராக இருக்கிறேன். ஜெயக்குமாரை தெரியும். ஆஜர் எதிரிகளையும், ஆஜராகாத எதிரிகள் ஜாண் மிக்டயர், செல்வின் ஆகியவர்களை தெரியாது. ஜெயக்குமார் 2011ம் தேதி ஒரு நாள் ஜெயக்குமார் காபி குடிப்பதற்காக வந்தார். அப்போது ஒரு அம்பாசீடர் கார் வந்து நின்றது. அப்போது ஜெயக்குமாரை தூக்கி சென்று விட்டார்கள். யார் தூக்கி சென்றார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–

31.07.2011ம் தேதி காலை 08.20 மணிக்கு ஆஜர் எதிரிகள் அ.சா.1–ஐ அம்பாசீடர் காரில் கடத்தி சென்ற விபரம் பற்றி போலீசார் விசாரணையில்

**கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.246/2017**

**Deposition of P.W.** 5

Name : மீரா சாகீப்

S/o, D/o, W/o : பகருதீன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: **12.02.2025**

A1, A3, to A6 Present. A2, A7 absent Petition filed and allowed.

முதல் விசாரணை–

நான் மேக்காமண்டபத்தில் வசித்து வருகிறேன். நான் PMS டிபன் சென்டரில் வேலை பார்க்கிறேன். ஜெயக்குமாரை தெரியும். ஆஜர் எதிரிகளையும், ஆஜராகாத எதிரிகள் ஜாண் மிக்டயர், செல்வின் ஆகியவர்களை தெரியாது. ஜெயக்குமார் எங்கள் கடைக்கு தினமும்சாப்பிட வருவார் 30.07.2011ம் தேதி காலை 07.55 மணிக்கு சாப்பிட வந்தாா. 08.20 மணிக்கு வெளியே சென்றது தான் தெரியும். வெள்ளை கலர் அம்பாசீடர் காரில் கடத்தி சென்று விட்டார்கள். அந்த அம்பீாசுடர் கார் கேரளா பதிவு எண் கொண்ட கார் ஆகும். போலீசார் என்னிடம் உடனடியாக விசாரித்தார்கள். நான் நடந்த விபரங்களை சொன்னேன்.

**அரசு தரப்பில் சாட்சியை எதிரிகளை அடையாளம் காட்டாத பகுதியை பொறுத்து மட்டும் பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் தற்போதுஆஜராகியுள்ள எதிரிகளும் 2வது எதிரி ஜாண் மிக்டயர் மற்றும் 7வது எதிரி செல்வின் ஆகியவர்களும் தான் எதிரிகளை கடத்தினார்கள் என்பது பற்றி தெரிந்து கொண்டும், தற்போது எதிரிகளுக்கு பயந்து அவர்கள் பெயர்அடையாளத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது கூறியுள்ள விபரங்களை தான் போலீசாரிடம் சொன்னேன். நான் சொன்னதை போலீசார் எழுதிக்கொண்டாகளா என்று எனக்குத் தெரியாது.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் 08.45 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் கூட்டுறவு வங்கி மற்றும் PMS டிபன் சென்டர் மற்றும் ஒரு வீடு உள்ளது. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளரை தெரியாது.

**3வது, 5வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை

4**வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் PMS டிபன் சென்டரில்மாஸ்டராக வேலை பார்க்கிறேன். கிச்சனில் வேலை பார்த்தால் வெளியே நடப்பது தெரியாது என்றால் சரிதான். சத்தம் கேட்டு வெளியே வந்தேன். சமையல் வேலை

செய்பவர்களுக்கு யார் எப்போது சாப்பிட வருவார்கள் என்று தெரியாது என்றால் சரியல்ல. சாப்பிட வருபவர்கள் எல்லாரையும் தெரியாது. சம்பவ நாளன்று நான் கல்லாப்பெட்டியில் இருந்தேன். போலீசார் விசாரிக்கும் போது நான் கல்லாப்பெட்டியில் இருந்த விபரத்தை கூறவில்லை. சம்பவ சமயம் 5 பேர் கடையில் சாப்பிட்டு இருப்பார்கள். எனக்கு அறிமுகமான வேறு யார் அப்போது சாப்பிட்டு கொண்டிருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. கொற்றிக்கோடு காவல்நிலைய போலீசாரும் காபி குடிக்க வருவார்கள் என்றால் சில பேர் வருவார்கள். நான் கடையில் மாஸ்டராக இருந்ததாகவும், கல்லாப்பெட்டியில் இருந்ததாகவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்து நாள், நேரம் பற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எங்கள் கடைக்கு முன்னர் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசாருக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

6<u>வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் சொல்லி கொடுத்ததின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7<u>வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.